02.12.2024

O.S.No.483/2022

PW1 திரு.கோபாலகிருஷ்ணன் ( 1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை):-

சாட்சி வா.த.சா.1 இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

அடமானம் எழுதிக்கொடுத்த அல்போன்ஸ் என்பவரை எனக்கு நேரடியாக தெரியாது. அவரது மகன் மூலமாக எனக்குத் தெரியும். பணத்தை அல்போன்ஸ், அவரின் மனைவி மற்றும் அவரின் 4 பிள்ளைகள் மொத்தம் ஆறுபேர் சேர்ந்து வாங்கினார்கள். அவரிகளில் ஒருவர் அவரது மனைவியின் பிரசவத்திற்காக மருத்துவமனைக்கு சென்றிருப்பதாக சொன்னார்கள். பிரதிவாதிகள் 5 பேரையும் எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியுமா என்றால், எனக்கு பிரதிவாதி பவுல்ராஜை மட்டும் தெரியும். 2ம் பிரதிவாதி பவுல்ராஜ் அந்த வீட்டில் குடியிருந்து வருகின்றார். அவர்தான் வந்து என்னிடம் பணம் கேட்டார். அப்படி என்றால் நான் அல்போன்ஸ்க்கும் அவரின் மகன்களுக்கு தான் பணத்தை கடனாக கொடுத்தேன். இந்த அடமானத்தை பேசி விட்டது தான் பவுல்ராஜ். நான் அடமான தொகையை இரண்டாம் பிதிவாதி பவுல்ராஜிடம் மட்டும் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எல்லா பிரதிவாதிகளிடம் சேர்த்துக்கொடுத்தேன். நான் கொடுத்த கடன் தொகைக்கு மாதம் 2 சதவீத வட்டி விகிதம் நிர்னயம் செய்யப்பட்டது. கடன் தொகையை திருப்பித் தரும் வரை மாதம் மாதம் வட்டி கொடுக்கவேண்டும் என்று நானும், 2ம் பிரதிவாதி பவுல்ராஜீம் பேசிக்கொண்டோம் என்றால், அவரின் அப்பா அல்போன்ஸிடம் பேசினோம். சாட்சி தற்பொழுது அல்போன்ஸ் மட்டும் அல்ல, எல்லோரிடமும் சேர்ந்து பேசினேன் என்று கூறுகின்றார். 2ம் பிரதிவாதி பவுல்ராஜ் மாதம் மாதம் எவ்வளவு வட்டி கொடுத்தார் என்று குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால், சில மாதங்களில் வட்டி கொடுத்தார். சில மாதங்களில் வட்டி விட்டுபோய், வரும் மாதங்களில் சேர்த்துக்கொடுத்தார். இந்த நிலையில் பிப்ரவரி 2015 வரை

வட்டிப்பணம் கொடுத்திருந்தார். 2ம் பிரதிவாதி பவுல்ராஜ் மாதம்தோறும் வட்டிபணமாக கடன்பெற்றதில் இருந்து 2021ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரைக்கும் என்னிடம் வட்டி கொடுத்து வந்தார் என்றால் சரியல்ல. நான் பொய்யாக சொல்லுகின்றேன் என்றாலும், நான் பெற்ற வட்டி பணத்தை மறைத்து பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்திருக்கின்றேன் என்றால் சரியல்ல. நான் எவ்வளவு தொகையை வரப்பெற கோரி இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கின்றேன் என்றல் ரூ.17 லட்சத்திற்கு மேல் உள்ள தொகை. நான் இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக 25.04.2022 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதிகளுக்கு அனுப்பியிருக்கின்றேன் என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் ரூ.36,03,015/= பணத்தை கொடுக்கவேண்டும் என்று குறிப்பிட்டு சொல்லியிருக்கின்றேன் என்றால் சரியல்ல. சாட்சி தற்பொழுது 2021 ஆம் ஆண்டு ஜீன் மாதம் பவுல்ராஜ் ரூ.5,000 வட்டிக்காக கொடுத்தார். ஒரு மாதத்திற்குள் மீத பணத்தையும் செட்டில் செய்துவிடுவதாக கூறினார் என்று சாட்சி தன்னிச்சையாக கூறுகின்றார்.

(அறிவார்ந்த பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகின்றது).